# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 13.03.2025 |
| Case No. | : O.S. 166-2019 | Nationality | : Indian |
| Name | : ஜெயராமன் | Religion | : |
| Father's/Husband's Name | : சாமிநாதன் | Age | : 67 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு நான் விவரம் கூறி எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். அதில் தவறாக சங்கதிகள் எதுவும் கூறப்பட்டிருந்தால் அதற்கு நான் பொறுப்பு என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவாச்சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று கூறி தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் தாவாச்சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். வேறு பரிகாரம் எதுவும் கேட்டுள்ளேனா என்றால் எனது சொத்துக்களை ஆக்கிரமிக்க கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன். நிரூபண வாக்குமூலத்தை எனக்காக மட்டும் தாக்கல் செய்துளளேனா அல்லது 2 ம் பிரதிவாதிக்காகவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இருவருக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். காலம் சென்ற கோவிந்த படையாட்சி எனது தாத்தா ஆவார். நானும் 2 ம் பிரதிவாதியும் கோவிந்த படையாட்சியின் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு யார் யார் வாரிசுகள் என்றால் நானும் எனது தம்பியும் தான் வாரிசுகள் ஆவோம். எனக்கு உடன் பிறந்த சகோதரிகள் உள்ளார்களா என்றால் ராஜேஸ்வரி என்ற சகோதரி இருந்தார். அவர் இறந்து விட்டார். அவர் திருமணம் ஆகி தான்

இறந்தார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

தாவாச்சொத்திகளின் சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்கள் 16, 17, 45 மற்றும் 46 ஆகும். 16ல் 2 1/2 ஏர்ஸ். 17 ல் 1 1/2 ஏர்ஸ். 45 மற்றும் 46 அதிலேயே சேர்ந்துள்ளது. மொத்த விஸ்தீரணம் 4 ஏர்ஸ் என்றால் சரிதான். மேற்படி 4 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள சொத்திற்கு எனது பெயரிலும், குணசேகரம் பெயரிலும் கூட்டு பட்டா உள்ளது என்றால் ஆமாம். பட்டா எப்போது வாங்கினோம் என்றால் பட்டா வாங்கி 40 வருடங்கள் ஆகிறது. பட்டா எண் தெரியுமா என்றால் 16,17 தான் பட்டா எண் ஆகும். சாட்சி தற்போது தானாக பட்டா எண் 676 என்று கூறுகிறார்.

எனது தாத்தா எந்த வருடம் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் 1937 ம் ஆண்டு கிரயம் பெற்றுள்ளார். யாரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்று தெரியவில்லை. பத்திரத்தில் உள்ளது. அந்த ஆவணத்தை வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் மேற்படி ஆவணத்தில் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் தாவாச்சொத்துககள் காட்டப்பட்டுள்ளதா என்றால் புல எண்கள் 130/14 மற்றும் புல எண் 130/17 ஆகிய சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள தாவாச்சொத்துக்களுக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துக்களுக்கு பட்டா தவிர கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வழக்கிற்கு பிறகு தாவா ச்சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் எதுவும் ஏற்பட்டுளளது என்றால் புல எண்கள் 16 மற்றும் 46 சொத்துககளை பொறுத்து ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கும் எனது தம்பி மனைவிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முன்பு அல்லது பின்புபதிவு செய்யப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. புல எண் 16 யை பொறுத்து கிரயம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

எந்த சொத்தில் பிரதிவாதிகளால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் 16 மற்றும் 45 ல் பிரச்சனை ஏற்பட்டது. வழக்கில் எதற்காக நான்கு சொத்துககளை சேர்த்தோமென்றால் சொத்துக்கள் கூட்டு பட்டாவில் இருந்ததால் சேர்த்துள்ளேன். மற்ற இரண்டு சொத்துக்களில் பிரதிவாதிகளால் பிரச்சனை இல்லை என்றால் 4 சொத்துகளிலும் பிரச்சனை உள்ளது.

பிரதிவாதிகள் எந்த தேதிகளில் பிரச்சனை செய்தார்கள் என்றால் 2016 ம் ஆண்டில் இருந்து பிரச்சனை செய்து வந்தார்கள். பிரதிவாதிகள் தாவாச்சொத்துக்களை ஆக்கிரமித்துவிட்டார்களா அல்லது ஆக்கிரமிக்க முயற்சி செய்து வருகிறார்களா என்றால் ஆக்கிரமிக்க முயற்சித்தார்கள் அதனை நான் தடுத்து நிறுத்துவிட்டேன் சொத்து என்னிடம் தான் உள்ளது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.17 18:49:57 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.